# உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய். சங்கீதம் 128 : 6

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே உங்களை வாழ்த்துகிறேன்.

இன்று நம்மிடத்தில் காணப்படுகிற பிரச்சினைகளில் ஒன்று, குழந்தை இல்லாமையாகும். சிலர், தங்களுக்கே குழந்தை இல்லை என இரத்தக் கண்ணீர் வடிக்கிறார்கள். வேறு சிலர் தங்கள் பிள்ளைகளுக்கு, பிள்ளைகள் இல்லையே என ஏங்கித் தவிக்கிறார்கள். சிலர் கர்த்தர் கொடுத்த கர்ப்பகனியை இழந்து அலைமோதுகிறார்கள். சிலருக்கு குழந்தை உருவெடுத்தும் சிதைந்து போய்விட்டது.

இப்படிப்பட்ட நிலைமையிலுள்ளவர்களுக்குத்தான் அந்த பாரம் புரியும். அவர்கள் வேதனைக்கு அளவே கிடையாது. நிந்தை அவமானம் சொல்லவே முடியாது. கை நிறைய சம்பளம், சொத்துக்கள், வீடு. ஆனால் இவைகளை அனுபவிப்பது யார் என ஏங்கித் தவிக்கும் உள்ளங்கள்.

அப்பா, அம்மா என்று சொல்வதற்கு ஒரு பிள்ளை கிடைக்காதா என்று அங்கலாய்க்கும் எத்தனை உள்ளங்கள். குடும்பமே இருண்டு போய் கிடக்கிறது. (இன்னொரு திருமணம் செய்யவேண்டும், விவாகரத்து செய்துவிடவேண்டும் என்று துடிப்போர் பலர். பிள்ளை இல்லை ஆதலால் சாகிறேன் என்பவர் பலர்)

யாக்கோபைப் பார்த்து ராகேல், ''எனக்கு பிள்ளைகொடும்; இல்லாவிட்டால் நான் சாகிறேன்'' என்கிறாள். **ஆதி. 30 : 1.** குழந்தைச் செல்வத்துக்காக எவ்வளவு பணம், எத்தனை ஊசி, எத்தனை மருந்து, ஆனாலும் பலன் இல்லை. கண்ணீர்தான் மிச்சம். ஆனாலும் மனிதனுக்கு தேவனின் முதல் கட்டளை ''நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்''. **ஆதி 1 : 28**

இந்த வசனத்தின்படி, எனக்கு ஆசீர்வாதம் இல்லையே என கர்த்தரிடம் கண்ணீர் வடிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, வேதம் சொல்கிறது,

**''நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காணபாய்'' – என்பதாக. அல்லேலூயா!**

பிள்ளையற்றிருக்கிற நீ, உனக்குப் பிள்ளைகளைப் பெற்றெடுப்பது மாத்திரமல்ல, பேரப்பிள்ளைகளையும் காண்பாய்; கர்த்தருடைய வார்த்தையை அப்படியே விசுவாசியுங்கள். நீ விசுவாசிக்கிறபடியே உனக்கு ஆகக்கடவது.

**ஆதி. 20 : 17,18** சொல்கிறது, ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருந்தபடியால், ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக் கொண்டான். அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும் அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி பிள்ளை பெறும்படி அனுக்கிரகம் பண்ணினார்.

என் அன்பு சகோதரனே சகோதரியே, எத்தனையோ வியாதிகளை உன்னிலிருந்து கர்த்தர் விலக்கினார்.

அபிமெலேக்கு, அவன் மனைவி, வேலைக்காரி, மூவரின் ''மலடு'' என்ற வியாதியை நீக்கின தேவன், உன்னுடைய வாழ்க்கையில், உன் மலட்டு வியாதியை நீக்க மாட்டாரா ? கட்டாயம் நீக்குவார்.

கர்த்தர் தமது வசனத்தை அனுப்பி, உங்கள் ''மலடு'' என்ற வியாதியை குணமாக்கி, அழிவுக்குத் தப்புவிப்பார்.

**மல்கியா 2 : 15** சொல்கிறது, ''கர்த்தர் ஒருவனையல்லவா படைத்தார். ஆவி அவரிடத்தில் பரிபூரணமாயிருந்ததே. பின்னை ஏன் ஒருவனைப் படைத்தார். **தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறும்படிதானே ?''**

என் அன்பு சகோதரியே, தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும்படி உன்னையும் தேவன் தெரிந்தெடுத்துள்ளார். இயேசு உன்னையும் நேசிக்கிறார்.

வேதத்தில் குழந்தை இல்லாமல் தவித்த சில நபரை குறிப்பிடுகிறேன். 1. ஆபிரகாம் சாராள், 2. ரெபேக்காள், 3. ராகேல், 4. அன்னாள், 5. மனோவா குடும்பம், 6. சூனேமியாள், 7. சகரியா எலிசபெத் ஆகியோர். எட்டாவதாக உங்கள் பெயரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

மேற்கண்ட 7 பேரும் பிள்ளைகள் இல்லாமல் துக்கத்தோடு மரித்திருந்தால் நீங்களும் பயப்படவேண்டியது வரும். ஆனால் 7 பேரும் பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்களே.

அப்படியானால் எட்டாவது நபராகிய நீங்கள் ''மழலைசெல்வத்தை'' காண்பது அதிக நிச்சயமல்லவா ? ஆமென். அல்லேலூயா! **சங்.113:9** சொல்கிறது, ''மலடியை சந்தோஷமான பிள்ளைதாய்ச்சியாக்கி வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார்''– என்பதாக. கர்த்தரிடம் கண்ணீர் வடிக்கும் சகோதரியே, **''நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும், இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.'' ஆமென்! தேவனுக்கே மகிமை!**